27-10-2012 Dinakaran

### நேரு பூங்காவை தொடர்ந்து

# வண்ணாரப்பேட்டை– சென்ட்ரல் இடையே சுரங்கம் தோண்டும் பணி துவக்கம்

## மெட்ரோ ரயில் பணிகள் தீவிரம்

சென்னை, அக். 27: மெட்ரோ ரயில் பணிக்காக நேரு பூங்காவை தொடர்ந்து வண்ணாரப்பேட்டை – சென்ட்ரல் இடையே பூமிக்கு அடியில் சுரங்கம் தோண்டும் பணி துவங்கியது.

வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரை 23 கி.மீ. தூரமும், சென்ட்ரலில் இருந்து புனித தோமையர் மலை வரை 22 கி.மீ. தூரமும் மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. 45 கி.மீ. தூரத்தில் 24 கி.மீ. தூர ரயில் பாதை பூமிக்கு அடியில், சுமார் 22 மீட்டர் ஆழத்தில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு, அங்கு மெட்ரோ ரயில் இயக்கப்பட உள்ளது.

சுரங்கப்பாதையில் மட்டும் 19 ரயில் நிலையங்கள் அமைக்கப்படுகிறது. ரயில் நிலையம் வரும் இடங்களில் மட்டும் பெரிய அளவில் பள்ளம் தோண்டப்பட்டு, அங்கு டனல் போரிங் மிஷின் (சுரங்கம் தோண்டும் ராட்சத இயந்திரம்) இறக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

முதலில் கீழ்ப்பாக்கம் அருகே நேரு பூங்காவில் மிஷின் இறக்கப்பட்டு, கடந்த ஜூலை 28ம் தேதி முதல் சுரங்கம் தோண்டும் பணி நடைபெற்று வருகிறது. அங்கு 85 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் தோண்டப்பட்டுள்ளது.

முதல் சுரங்கப்பாதை தோண்டும் பணி தொடங்கி சுமார் 3 மாதம் கடந்த நிலையில் வண்ணாரப்பேட்டையில் இருந்து சென்ட்ரல் ரயில் நிலையம் வரை மிஷின் மூலம் சுரங்கம் தோண்டும் பணி நேற்றுமுன்தினம் துவங்கியது. வண்ணாரப்பேட்டையில் இருந்து மண்ணடி, உயர் நீதிமன்றம் ஆகிய ரயில் நிலையங்களை தாண்டி சென்ட்ரல் ரயில் நிலையம் வரை சுமார் 1350 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் தோண்டப்படும்.

வண்ணாரப்பேட்டையில் 2வது மிஷினும் தயார் நிலையில் உள்ளது. முதல் மிஷின் 100 மீட்டர் தூரத்தை தாண்டியதும், 2வது பாதையில் சுரங்கம் தோண்டும் பணி தொடங்கும் என்று மெட்ரோ ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொதுமக்கள் மற்றும் கட்டிடங்கள் பாதுகாப்பு கருதி, ஒரு நாளைக்கு ஒன்று முதல் இரண்டு மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் தோண்ட அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். சுரங்கம் தோண்டிய பகுதியில் உடனடியாக சுமார் 6 மீட்டர் சுற்றளவுள்ள கான்கிரீட் வளைவுகள் பொருத்தும் பணியும் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



சுரங்கப்பணியில் போரிங் மிஷின்.

## நேரு பூங்காவில் நிறுத்திய பணி மீண்டும் தொடக்கம்

நேரு பூங்காவில் தொடங்கிய பணியில் கடந்த செப்டம்பர் மாத இறுதி வரை 85 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் தோண்டப்பட்டது. அப்போது மிஷினின் முன் பகுதி கட்டரில் தேய்மானம் ஏற்பட்டதால் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இதையடுத்து சுரங்கத்தில் இருந்து மிஷின் வெளியே கொண்டு வரப்பட்டு, புதிய கட்டர் மாற்றும் பணி நடைபெற்றது. இந்த பணிகள் முடிவடைந்ததையடுத்து, நேற்று முன்தினம் காலை முதல் நேரு பூங்காவில் மீண்டும் சுரங்கம் தோண்டும் பணி துவங்கியது. நேரு பூங்காவில் 100 மீட்டர் தூரத்துக்கு சுரங்கம் தோண்டும் பணி முடிவடைந்ததும், தயாராக உள்ள மற்றொரு மிஷின் மூலம் நேரு பூங்கா - எழும்பூர் இடையே 2வது சுரங்கப்பாதை தோண்டும் பணி துவங்கும் என்று மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.